28.11.2016

தினமணி

**பயிர்க் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

புதிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் காப்பீடு செய்து பயன்பெறுமாறு குறிஞ்சிப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஏழுமலை கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: குறிஞ்சிப்பாடி வட்டத்தில் தற்போது விதைப்பு செய்துள்ள மணிலா , உளுந்து பயிர்களை காப்பீடு செய்து பயனடையலாம். புதிய காப்பீட்டு திட்டத்தில் காப்பீட்டு தொகையை 4 நிலைகளாகப் பெற வாய்ப்புள்ளது. விதைக்க இயலாத சூழ்நிலை மற்றும் இயற்கை சூழ்நிலையில் விதைகள் முளைத்து கருகியிருந்தால் காப்பீட்டுத் தொகையில் 25 சதவீதம் இழப்பீடு வழங்கப்படும். பயிர்களின் வளர்ச்சிப் பருவம் முதல் அறுவடை வரை இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்புகளுக்கு உத்தரவாத மகசூல் 50 சதவீதம் குறைவாக இருந்தால் 25 சதவீதம் இழப்பீடு வழங்கப்படும். அறுவடை செய்த 2 வாரங்களில் மழை வெள்ள பாதிப்பு ஏற்படுமாயின் இழப்பீடு வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் உளுந்து மற்றும் பச்சைப் பயறுக்கு காப்பீட்டு தொகை ரூ. 12 ஆயிரம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 15.2.2017 தேதிக்கு முன்னதாக காப்பீட்டுத் தொகையில் 1.5 சதவீதம் (ஏக்கருக்கு ரூ.180), நிலக்கடலை பயிருக்கு ரூ. 20 ஆயிரம் வீதம் நிர்ணயம் செய்யப்பட்டது. 31.12.2016-க்கு முன்னதாக காப்பீட்டுத் தொகையில் 1.5 சதவீதம் (ஏக்கருக்கு ரூ. 300) முனைமம் செலுத்தி பயனடையலாம்.

மேலும், விவரங்களுக்கு கிராம உதவி வேளாண்மை அலுவலரை தொடர்புகொண்டு சிட்டா , அடங்கல், வங்கிப் புத்தகம் , ஆதார் கார்டு ஆவணங்களை வழங்கி உரிய காலக்கெடுவுக்குள் முனைமம் செலுத்தி பயனடையுமாறு விவசாயிகளை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**நேரடி விதைப்பு செய்த சம்பா வயல்களில் கணிப்பாய்வு அலுவலர் ஆய்வு**




திருவாரூர் மாவட்டத்தில் நேரடி விதைப்பு செய்யப்பட்ட சம்பா நெல் வயல்களில் மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் கே. மணிவாசகம் சனிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

திருவாரூர் மாவட்டத்தில் காரக்கோட்டை , மலவராயநல்லூர், திருப்பத்தூர், தில்லைவிளாகம், இடையூர்சங்கேந்தி, மேலபெருமலை போன்ற பகுதிகளில் உள்ள விளைநிலங்களில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட சம்பா நெற்பயிர்களின் விதைப்பு காலங்கள் , தற்போது நெற்பயிர்களின் தன்மை போன்றவைகளை ஆய்வு செய்து ,

வேளாண்மைத் துறை மூலம் அரசின் திட்டங்கள் முழுமையாகக் கிடைக்கிறதா எனவும் , வேளாண்மை பயிர்க் காப்பீட்டுத் திட்டம் குறித்தும் விவசாயிகளிடம் கேட்டறிந்து கலந்துரையாடினார். தொடர்ந்து திருத்துறைப்பூண்டி வட்டம் , பனையூர் ஊராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறதா என ஆய்வு செய்து , மக்களிடம் தடையின்றி குடிநீர் கிடைக்கிறதா , அரிசி, சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய் போன்ற பொருள்கள் தடையின்றி விநியோகம் செய்யப்படுகிறதா எனவும் மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் கேட்டறிந்தார்.

இதையடுத்து, ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் விவசாயிகளுக்கு தங்குத் தடையின்றி மும்முனை மின்சாரம் வழங்க மின்வாரிய பொறியாளர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய சுழற்சி முறையில் மின்வாரிய ஊழியர்களைக் கொண்டு குழு அமைத்து பராமரிக்க வேண்டும்.

கூட்டுறவுத்துறை மூலம் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்க உரிய நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும். அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் சிறப்பு முகாமுக்கு ஏற்பாடு செய்து , மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் புதிய வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டு பயிர்க் கடன் வழங்கும் பணியை துரிதப்படுத்த வேண்டும். சிறு , குறு விவசாயிகளும் பயன்பெறும் வகையில் , பயிர்க் கடன் வழங்க வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் பணியாளர்களுக்கு நிலுவை ஊதியத்தை விரைந்து வழங்க வேண்டும். ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் தங்குத் தடையின்றி கிடைக்கும் வகையில் தேவைப்படும் இடங்களில் ஆழ்குழாய் கிணறு

அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும் என்றார் மணிவாசகம். கூட்டத்தில் ஆட்சியர் இல. நிர்மல்ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 100 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசன கருவிகள் மாவட்ட தோட்டக்கலை துறை அலுவலர் தகவல்



நுண்ணீர் பாசனத் திட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத் திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டு நீர்ப் பாசனக் கருவிகள் மற்றும் மழைத் தூவான் கருவிகள் வழங்கப்படுவதாக தோட்டக்கலை துறை துணை இயக்குனர் தமிழ்வேந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: விருதுநகர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலம், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண் வளர்ச்சித் திட்டம் , உயர் தொழில் நுட்ப உற்பத்தி திட்டத்தின் மூலம், விவசாயிகளுக்கு அதிக மகசூல் கொடுக்கக்கூடிய ஒட்டு மாங் கன்றுகள், வீரிய ஒட்டு பப்பாளிக் கன்றுகள் , கொய்யா பதியன்கள் , எலுமிச்சை கன்றுகள் , மல்லிகை கன்றுகள் , வீரிய ஒட்டு வெண்டை , கத்திரி, தக்காளி மற்றும் மிளகாய் விதைகள் வழங்கப்படுகிறது.
ஒரு விவசாயிக்கு அதிக பட்சம் 2 ஹெக்டேர் பரப்பு வரை காய்கறி விதைகளும், 4 ஹெக்டேர் பரப்பு வரை பழக்கன்றுகளும் வழங்கப்படுகிறது.

வெங்காய சாகுபடி பரப்பை அதிகரிக்கும் பொருட்டு 156 ஹெக்டேர் பரப்பிற்கு ரூ. 31.20 லட்சத்தில் சிறிய வெங்காய விதைகள் 40 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. 40 சதவீத மானியத்தில் தேனீ வளர்ப்பு பெட்டி வழங்கப்படுகிறது.

நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும் , இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள் மற்றும் மழைத்தூவான் கருவிகள் வழங்கப்படுகிறது.

இதனைப் பயன்படுத்தி குறைந்த நீரில் அதிக பரப்பு சாகுபடி செய்யலாம் , களைகள் கட்டுப்படுத்தப்படுகிறது. கூலிச்செலவுவும் குறைகிறது.
2016-17 ஆம் ஆண்டு நுண்ணீர் பாசனம் திட்டம் தோட்டக்கலைப்பயிர்களுக்கு 146.50 ஹெக்டேர் பரப்பில் ரூ. 100.87 லட்சத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே, விருதுநகர் மாவட்ட விவசாயிகள் தோட்டக்கலை திட்டங்களை செயல்படுத்தி பயன்பெற குடும்ப அட்டை நகல் , புகைப்படம், கிராம அலுவலர் வழங்கிய அடங்கல் , நிலத்தின் வரைபடம் போன்ற ஆவணங்களுடன் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி முன் பதிவு செய்து பயன் பெறலாம் என்றார் அவர்.

**அமராவதி அணை நீர்மட்டம் சரிவு: விவசாயிகள் கவலை**

90 அடி உயரமுள்ள அமராவதி அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி 37 அடியாக சரிந்துள்ளது. இதனால் , விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர் , கரூர் மாவட்டங்களில் உள்ள சுமார் 55 ஆயிரம் ஏக்கர் பழைய , புதிய ஆயக்கட்டு விளைநிலங்கள் பயன் பெற்று வருகின்றன. மேலும் , நூற்றுக்கணக்கான கரையோர கிராமங்களுக்கு குடிநீர் ஆதாரமாகவும் இந்த அணை விளங்குகிறது.

இந்நிலையில், இந்த ஆண்டு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்கு பருவமழை நல்ல முறையில் பெய்தது. இதனால், அணையின் நீர்மட்டம் திருப்திகரமாக இருந்ததால் குடிநீருக்காக பல முறை தண்ணீர் திறக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பழைய , புதிய ஆயக்கட்டுப் பாசனத்துக்கும் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் , அணையின் நீர்மட்டம் கடந்த ஒரு மாதத்தில் படிப்படியாகக் குறைந்து வந்தது.

வடகிழக்குப் பருவ மழையை விவசாயிகள் பெரிதும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் , எதிர்பார்த்தபடி மழை பெய்யவில்லை.

ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தில் அமராவதி அணை நிரம்பி, உபரி நீரை வெளியேற்றுவது வழக்கம். ஆனால் , இந்த ஆண்டு பருவமழை பெய்யாததால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

அணை நிலவரம்:

90 அடி உயரம் கொண்ட அணையில் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி நிலவரப்படி நீர்மட்டம் 37.72 அடியாக இருந்தது. அப்போது , அணைக்கு உள்வரத்தாக 20 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. 4,035 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அணையில் 650 மில்லியன் கன அடி நீர் இருப்பு இருந்தது. அணையில் இருந்து 310 கன அடி தண்ணீர் வெளியேறிக் கொண்டிருந்தது. மழைப் பொழிவு இல்லை.

**வறட்சியால் நெற்பயிர்கள் பாதிப்பு: வேளாண் இயக்குநர் ஆய்வு**



செய்யாறு தாலுகாவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை மாநில வேளாண் இயக்குநர் தட்சிணாமூர்த்தி ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார்.

தமிழகத்தில் நடப்பு சம்பா இறவை பருவத்தில் சாகுபடி செய்துள்ள நெற்பயிர்கள் பருவமழை பொய்த்ததால் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே , வறட்சியால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்ட பல்வேறு மாவட்டங்களில் தமிழக அரசின் வேளாண் துறை சார்பில் ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் மண்டல அலுவலரும், மாநில வேளாண் இயக்குநருமான தட்சணாமூர்த்தி ஐ.ஏ.எஸ் , சனி, ஞாயிறுக்கிழமைகளில் வறட்சியால் தண்ணீரின்றி கருகிய நெல் வயல்களை பார்வையிட்டு , ஆய்வு செய்தார். செய்யாறு , அனக்காவூர் ஆகிய வட்டாரப் பகுதிகளில் இந்த ஆய்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அப்போது, மாநில வேளாண் இயக்குநர் தட்சிணாமூர்த்தியிடம் , விவசாயிகள் காய்ந்த நெற்பயிர்களை காண்பித்து , நிவாரணம் கோரி மனு அளித்தனர். பின்னர் , விவசாயிகளுக்கு அவர் பதிலளிக்கையில் , நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் உடனடியாக பயிர் காப்பீடு செய்திட வேண்டும் என்றார்.

ஆய்வின்போது, செய்யாறு சார் - ஆட்சியர் (பொறுப்பு) பாலதண்டாயுதபாணி, வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) செந்தமிழ்ச்செல்வன், வட்டாட்சியர் ஜெயராம்சந்திரன் , வேளாண் உதவி இயக்குநர்கள் (அனக்காவூர்) ஏ.எம்.சாந்தி , (செய்யாறு) சத்தியமூர்த்தி , வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணமூர்த்தி , மூர்த்தி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

முன்னதாக தவசி கிராமத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிடப்பட்ட நெல் வயலை மாநில வேளாண் இயக்குநர் தட்சிணாமூர்த்தி பார்வையிட்டார்.

தொடர்ந்து, செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில் , மாவட்டம் முழுவதும் ஆய்வு செய்யப்பட்ட வறட்சி நிலவரங்கள் குறித்த அறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்படும் என்றார்.

**திருத்தணி சர்க்கரை ஆலையில் அரைவைத் தொடங்க தாமதம்: வெயிலில் காயும் கரும்புகள்; வேதனையில் விவசாயிகள்**



திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடப்பாண்டுக்கான கரும்பு அரைவையை அடுத்த மாதத்துக்கு திடீரென தள்ளிப் போட்டது. இதனால், ஏற்கெனவே வெட்டப்பட்டுள்ள கரும்புகள் வெயிலில் காய்ந்து வீணாவதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

திருவாலங்காட்டில், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. இந்த ஆலைக்கு, திருத்தணி, ஆர்.கே.பேட்டை, அத்திமாஞ்சேரி பேட்டை, சாலை, அரக்கோணம் மற்றும் கனகம்மாசத்திரம் ஆகிய

பகுதிகளில் இருந்து 13,500 விவசாயிகள் கரும்பு பயிரிட்டு ஆண்டுதோறும், அனுப்பி வைக்கின்றனர்.

ஆனால், ஆலைக்கு அனுப்பப்பட்ட கரும்புக்கான தொகையை முறையாக வழங்காமல், ஆலை நிர்வாகம் இழுத்தடித்து வருகிறது , இரு ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகை 32 கோடி ரூபாயை இதுவரை தரவில்லை என கரும்பு விவசாயிகள் குற்றம் சாட்டி வருகின்றனர். இந்நிலையில் நவம்பர் 28-ஆம் தேதி இந்த சர்க்கரை ஆலையில் அரைவை தொடங்கப்படும் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் சுந்தரவல்லி அறிவித்தார். இதையடுத்து கரும்புக்கான வெட்டு உத்தரவை ஆலை நிர்வாகம் 19-ஆம் தேதி அனுப்பியது. 26-ஆம் தேதி முதல் கரும்பை அனுப்பி வைக்க ஆலை நிர்வாகம் உத்தரவிட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து விவசாயிகள் வெளி மாவட்டங்களிலிருந்து தொழிலாளர்களை அழைத்து வந்து கடந்த சில நாள்களாக கரும்பு வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கரும்பை வெட்டி ஆலைக்கு அனுப்ப தயாராக இருந்த நிலையில் திடீரென்று ஆலை நிர்வாகம் ஆலையில் அரைவை அடுத்த மாதம் (டிசம்பர்) தொடங்கப்படும் எனவும் அதுவரை கரும்பை வெட்ட வேண்டாம் என்றும் தகவல் தெரிவித்துள்ளது.
ஏற்கெனவே அளித்த வெட்டு உத்தரவின்பேரில் வெட்டிய கரும்புகள் சாலையில் வெயிலில் காய்ந்து வருவதால் திருத்தணி , பள்ளிப்பட்டு வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.
கடந்த மாதமே அறுவடைக்குத் தயாராக இருந்த கரும்பு ஒரு மாதம் கால தாமதமாக ஆலையின் அனுமதி பெற்று வெட்டப்பட்ட நிலையில் , மேலும் சில நாள்கள் அரைவை தொடங்கப்படாது என தள்ளி வைத்துள்ள திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாக அறிவிப்பால் கரும்பு எடை குறைந்து விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.
இதுகுறித்து, நொச்சிலி கிராம விவசாயி பாபுராஜ் கூறியதாவது:
எங்கள் பகுதி கரும்புகள் அனைத்தும் திருவாலங்காடு கூட்டுறவு சர்க்கரை

ஆலைக்கு கரும்பு அனுப்புகிறோம். ஆனால் , ஏற்கெனவே வழங்கிய கரும்புக்கான தொகையை கொடுக்காமல் ஆலை நிர்வாகம் கடந்த 2 ஆண்டுகளாகவே இழுத்தடித்து வருகின்றது. நிலுவைத் தொகை , 32 கோடி ரூபாயை கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் உடனடியாக வழங்க வேண்டும்.

தனியார் ஆலைகளில் , விவசாயிகளுக்கு முன்பணம் கொடுத்தும் , கரும்பு அனுப்பிய ஒரு வாரத்தில் , அதற்கான தொகையும் வழங்கப்படுகிறது. ஆலை நிர்வாகத்தின் மெத்தன போக்கால் கரும்பு அறுவடை உள்ளிட்ட செலவினங்களுக்கு வாங்கிய கடனுக்கு ,வட்டியை கூட கட்ட முடியாமல் கடந்த சில மாதங்களாகவே அவதிப்பட்டு வருகிறோம்.
மத்திய சுற்றுச் சூழல் அமைப்பிடமிருந்து சான்று பெறுவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தால் தான் அரைவை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஆலை நிர்வாகம் தெரிவித்துள்ளது என்றார்.
தமிழக அரசு இதில் தலையிட்டு திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரைவையைத் தொடங்க நடவடிக்கை எடுப்பதுடன் , கரும்பு நிலுவைத் தொகையினை வழங்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**வறட்சிக்கு இலக்காகும் கிராம , நகரங்கள் கணக்கெடுப்பு: மழை சேதத்துக்கு ஒதுக்கிய நிதியை வறட்சிக்கு செலவிட உத்தரவு**



வடகிழக்கு பருவமழை பொய்த்து விட்டதால் ஏரி , குளங்கள் தண்ணீர் இல்லாமல் வறண்டுவிட்டன.இதையடுத்து வறட்சிக்கு இலக்காகும் கிராமங்கள், நகரங்களில் மழை சேதத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை பயிர்களைப் பாதுகாக்கவும் , குடிநீருக்கு செலவிடவும் அரசு உத்தரவிட்டுள்ளதாக கூறப் படுகிறது.

பொதுவாக வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் அக். 20-ம் தேதி தொடங்கி, டிச. 15-ம் தேதி வரை பெய்யும். இதில் உத்தேசமாக , 16 முதல் 17 மழை நாட்கள் , இந்த வடகிழக்கு பருவமழை பெய்யும். கடந்த 6 ஆண்டுகளாக இந்த பருவமழை குறைந்துகொண்டே வந்து , இந்த ஆண்டு

இதுவரை ஒரு நாள்கூட பெய்யவில்லை. அதனால், தமிழகத்தில் இருக்கும் பெரும்பாலான குளம், ஏரிகள், கிணறுகள் வறண்டு விட்டன.

இந்நிலையில் டிசம்பர் முதல் வாரத்தில் 2 மழை நாட்கள் பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்து ள்ளது. இந்த மழை போதுமானதாக இருக்காது என்பதால் திருப்பூர் , கரூர், திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, தூத்துக்குடி உள்ளிட்ட வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்ட முதன்மை மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இரண்டாவதாக நீலகிரி , கன்னியாகுமரி, கடலூர், திருவண் ணாமலை , திருநெல்வேலி உள்ளிட்ட மற்ற மாவட்டங்களிலும் குடிநீர் பிரச்சினை தலைதூக்கி உள்ளது. ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் விவசாயம் பாதி க்கப்பட்டுள்ளதால் ஏற்கெனவே பயிரிடப்பட்ட பயிர்கள் சேத மடைந்தன. இருக்கிற பயிர்களை பாதுகாக்க தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் பரிதவிக்கின்றனர். இதனால், காய்கறிகள் விலை உயர்ந்துள்ளது.

இதுகுறித்து வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியது: வறட் சியால் இந்திய பொருளாதாரம் வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது.காய்கறிகள் உற்பத்தி குறைந்து, அதன் விலை உயர வாய்ப்புள்ளது.

தீவனப்பற்றாக்குறையால் கால்நடைகளை விவசாயிகள் பராமரிக்க முடியாமல் அடிமாட்டு விலைக்கு விற்கும் நிலை ஏற்படும். இதனால் , ஒரு விவசாயிக்கு 25 ஆயிரம் ரூபாயில் இருந்து ரூ. 50 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படும். இறைச்சிகள் விலை உயரும். நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததால் சுகாதாரமற்ற தண்ணீரை மக்கள் குடிக்கும் நிலைக்கு தள்ளப்படுவர். அதன் மூலம் தொற்று நோய்கள் ஏற்படும்.

தனியார் தண்ணீர் நிறுவனங்கள் அதிகமான நிலத்தடி நீரை உறிஞ்ச வாய்ப்புள்ளது. சுத்திரிகரிக்கப்பட்ட குடிநீர் விலை அதிகரிக்க

வய்ப்புள்ளது. அதனால், மழைசேதத்துக்கு ஒதுக்கிய நிதியை தமிழக அரசு தற்போது வறட்சிக்கு செலவிடுகிறது. புது ஆழ்துளை கிணறுகள் போடாமல் பழைய ஆழ்துளை கிணறுகளை சரி செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. எந்த ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் இருக்கிறது என கண்டுபிடித்து அதில் மோட்டார்கள் பொருத்தி தண்ணீர் எடுக்க உத்தரவிட்டுள்ளது.

தற்போது ஓரளவு குடிநீர் பிரச்சினையை சமாளித்துவிடலாம். பருவமழை முற்றிலும் ஏமாற்றும் பட்சத்தில் மார்ச் , ஏப்ரல், மே மாதங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும். அதனால் , முன்கூட்டியே குடிநீர் பிரச்சினையை தீர்ப்பத ற்கான ஏற்பாடுகளில் மாவட்ட நிர்வாகத்துடன் பொதுப்பணித் துறை, குடிநீர் வடிகால் வாரியம் , வேளாண் துறை , தோட்டக்கலைத்துறை, வருவாய் துறை இணைந்து செயல்பட உத்தரவிடப்பட்டுள்ளது. வறட்சி க்குள்ளாகும் வாய்ப்புள்ள கிராம ங்கள் , நகரங்களை கண்டறிந்து அங்கு குடிநீர் பற்றாக்குறை ஏற்படாமல் முன்னேற்பாடுகள் செய்யப் படுகின்றன.அழிந்துபோகும் நிலையில் இருக்கக்கூடிய பயிர்க ளை காப்பாற்ற தண்ணீரை எப்படி பகிர்ந்து கொடுப்பது, இழப்பீடு தொகையை எப்படி பெற்றுக் கொடுப்பது , வங்கிகள் மூலம் கடனுதவி எப்படி பெற்றுக்கொடுப்பது உள்ளிட்ட ஆலோசனைகள் நடைபெறுகின்றன என்றார்

## பொன்னேரி அருகே 88 பேருக்கு ரூ.41 லட்சம் பயிர் கடன்: அமைச்சர்கள் வழங்கினர்

பொன்னேரி அருகே கிருஷ் ணாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் 88 பேருக்கு ரூ. 40.60 லட்சம் மதிப்புள்ள பயிர் கடனுதவிகளை பள்ளிக் கல்வி விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் பாண்டியராஜன் , ஊரகத் தொழில் துறை அமைச்சர் பெஞ்சமின் ஆகியோர் நேற்று வழங்கினர்.

திருவள்ளூர் மாவட்டம் , பொன்னேரி அருகே உள்ள கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் நேற்று விவசாய பயிர் கடன் வழங்கும் விழா நடந்தது.

இதில், 88 பேருக்கு 40 லட்சத்து 60 ஆயிரத்து 321 ரூபாய்க்கான பயிர் கடனுதவிகளை அமைச்சர்கள் வழங்கினர்.

பின்னர் அமைச்சர் பாண்டியராஜன் பேசியதாவது: மகாராஷ்டிரா , குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகிய 3 மாநிலங்களிலும் கூட்டுறவு சங்கங்களில் 4 லட்சம் கோடி ரூபாய் நிதி சேமிக்கப்பட்டுள்ளது. இதில் 52 ஆயிரம் கோடி ரூபாய் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களில் சேமிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இதுவரை இரண்டு முறை 100 மில்லியன் மெட்ரிக் டன்னுக்கு மேல் நெல் பயிர் விளைவிக்கப்பட்டுள்ளது.

வரும் காலத்தில் 142 மில்லியன் மெட்ரிக் டன் நெற் பயிர் விளைவிக்க தமிழக அரசு விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அமைச்சர் பெஞ்சமின் பேசிய தாவது:

தமிழக முதல்வர் வாக்குறுதி அளித்தபடி அனைத்து சிறு மற்றும் குறு விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்துள்ளார். விவசாயம் என்பது ஒரு நாட்டின் முதுகெலும்பு என்பதை கருத்தில் கொண்டு விவசாயத்துக் கும் விவசாயிகளுக்கும் விலை யில்லா இடு பொருட்கள் , மானியம் போன்ற பல நல்ல திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சுந்தரவல்லி , திருவள்ளூர் எம்பி வேணுகோபால், பொன்னேரி எம்எல்ஏ பலராமன் , பொன்னேரி சார் ஆட்சியர் தண்டபாணி, கூட்டுறவு சங்கங் களின் இணைப்பதிவாளர் செந்

தில்குமார்,    காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் ஜெயபால், திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவர் சின்னசாமி உள்ளிட்டோர் பங் கேற்றனர்.